# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2023 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டம்

---

[*2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023, ஒற்றோபர் மாதம் 20 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 42.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ***2023 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டம்***

[*2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஓ. 49/2013*

***இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப்பொறுப்பு எனவழைக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; கண் அறுவை சிகிச்சைக்காகவும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் கல்விக்காகவும் தேவைப்படும் விழிவெண்படல இழையங்களையும் செயற்கையான சாதனங்களையும் மற்றும் வேறு இழையங்களையும் வழங்குவதற்கும்; கண் அறுவை சிகிச்சைக்காக தேவைப் படும் மிகையான விழிவெண்படல இழையங்களையும் வேறு இழையங்களையும் ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங் களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

*முன்னுரை*

*விழிவெண்படல குருட்டுத் தன்மையானது, ஆசியாவில் அதியுயர் நிலவுகையுடன் உலகெங்கும் குருட்டுத்தன்மைக்கான பிரதான காரணிகளுள் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளதாதலாலும், இலங்கைச் சுகாதார அமைச்சு, விழிவெண்படல குருட்டுத் தன்மையை குறைக்கும் நோக்குடன் இரண்டாயிரத்துப் பதினோரா மாண்டு பெப்புருவரி இருபத்திநான்காம் நாளிலிருந்து கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் இடமளிக்கப்பட்டு, இலங்கை தேசிய கண் வங்கியொன்றை தாபித்துள்ளதாதலாலும்:*

*அத்துடன், குருட்டுத்தன்மையை குறைக்கும் நோக்குடனும் தவிர்க்க முடியுமான குருட்டுத்தன்மையை தடுப்பதற்கும் கட்டுப்படுத்து வதற்கும் தற்போது இலங்கை அரசாங்கம் இலங்கை தேசிய கண் வங்கியைக் கூட்டிணைப்பதற்கு விரும்புகின்றதாதலாலும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

பாகம் I

**இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப்பொறுப்பைத் தாபித்தல்**

இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பைத் தாபித்தல்

**2**. (1) (இதனகத்துப் பின்னர், "நம்பிக்கைப்பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பு எனவழைக்கப்பட வேண்டிய நம்பிக்கைப்பொறுப் பொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நம்பிக்கைப்பொறுப்பானது, (1) ஆம் உப்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன் றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையைக் கொண்டிருத்தலும் வேண்டும் அத்துடன் அப்பெயரைக்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்கள்

**3**. நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்கள், பின்வருவன வாதல் வேண்டும் :-

(அ) இலங்கையில் குருட்டுத் தன்மையை குறைத்தலும் இலங்கையில் தவிர்க்க முடியுமான குருட்டுத்தன்மையை தடுத்தலும் கட்டுப்படுத்தலும்;

(ஆ) இலங்கை தேசிய கண் இழைய வங்கியொன்றாகப் பணி யாற்றுதலும்;

(இ) கண் அறுவை சிகிச்சைக்காக தேவைப்படும் விழிவெண் படல இழையங்களை திரட்டுதல் மற்றும் மாற்றிப்பொருத்து தல் அத்துடன் வேறு இழையங்களைப் பயன்படுத்துதல் தொடர்பில் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட வேண்டிய மருத்துவ, தரநியமங்கள் மற்றும் ஒழுக்கவியலு டன் அமைந்தொழுகையில் கண் அறுவைசிகிச்சை, ஆராய்ச்சி மற்றும் கல்வி என்பனவற்றுக்குத் தேவைப் படும் விழிவெண்படலங்கள் மற்றும் வேறு இழையங்களை திரட்டுதலும், செய்முறைப்படுத்தலும் விநியோகித்தலும்;

(ஈ) கண் அறுவை சிகிச்சைக்காக தேவைப்படும் விழிவெண் படல இழையங்கள் மற்றும் வேறு இழையங்களை நன்கொடையளித்தலின் நன்மைகள் மற்றும் விழுமியங்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புணர்வை அதிகரித்தலும்;

(உ) கண் அறுவை சிகிச்சைக்காக தேவைப்படும் விழிவெண் படல இழையங்களையும் வேறு இழையங்களையும் திரட்டுவதற்கு இழைய ஒருங்கிணைப்பாளர்களைப் பயிற்றுவித்தலும்;

(ஊ) மாற்றிப்பொருத்துகைகளுக்காக அரசாங்க வைத்திய சாலைகளுக்கு கண் அறுவை சிகிச்சைக்குத் தேவைப் படும் விழிவெண்படல இழையங்களையும் வேறு இழை யங்களையும் கட்டணமின்றி வழங்குதலும்; அத்துடன்

(எ) மிகையாகவுள்ள கண் அறுவை சிகிச்சைக்காக தேவைப் படும் விழிவெண்படல இழையங்களையும் வேறு இழை யங்களையும் வேறு நாடுகளுக்கு வழங்குதலும் விதித் துரைக்கப்படக்கூடியவாறான செய்முறைப்படுத்தல் ஆகுசெலவை அந்நாடுகளிலிருந்து அறவிடுதலும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின் நியதிகளின் படி விழிவெண்படலங்களையும் வேறு இழையங்களை யும் வழங்குவதில், எல்லாச் சந்தர்ப்பங்களிலும், அரசாங்க வைத்தியசாலைகளினாலும் இலங்கைப் பிரசைகளி னாலும் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுதல் வேண்டும்.

பாகம் II

**இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சபை**

*இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சபையைத் தாபித்தல்*

**4**. நம்பிக்கைப்பொறுப்பின் அலுவல்களின் நிருவாகம் மற்றும் முகாமை (இதனகத்துப்பின்னர், "சபை" எனக் குறிப்பீடு செய்யப் படும்) பின்வருபவர்களைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்புச் சபை யொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்–

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது,

(i) (இதனகத்துப்பின்னர், ‘‘தவிசாளர்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) சபையின் தவிசாளராகச் சேவையாற்றவேண்டிய சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ii) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமை யதிபதி;

(iii) கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளர் ஒருவரின் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள அவரது பிரதிநிதி;

(iv) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட திறைசேரியின் பிரதிநிதி ஒருவர்;

(v) கொழும்பு பிரதான சட்ட மருத்துவ அலுவலர்;

(vi) சுகாதார அமைச்சின் பிரதான கணக்காளர்;

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படும் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) பின்வரும் உறுப்பினர்கள் :-

(i) 2000 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை யின் கண்மருத்துவர்கள் கல்லூரிப் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட, இலங்கை கண்மருத்துவர்கள் கல்லூரியின் பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதியொருவர்;

(ii) கண் மருத்துவவியல் துறையில் தகைமைகள், மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள இலங்கை மருத்துவப் பேரவையில் பதிவுசெய் துள்ள மருத்துவத் தொழிலர்களினுள் இருந்து (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்

சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மருத்துவப் பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவர்; அத்துடன்

(iii) சட்டம் அல்லது முகாமைத்துவத் துறையில் அனுபவத்தை எண்பித்துள்ளவரும் ஆற்றலைக் காண்பித்துள்ளவருமான ஆளொருவர்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம்*

**5.** (1) ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின், சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவியில் உள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) பதவியை வறிதாக்குகின்ற சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவர் 6 ஆம் பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, தொடர்ச்சியாகவோ அல்லது வேறு வகையிலோ மேலும் ஒரு பதவிக்காலத்துக்கு மேற்படாத பதவிக்காலத்துக்கு மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை அகற்றுதல், அவர்கள் பதவி விலகுதல் முதலியன*

**6.** (1) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எந்நேரத்திலேனும், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன் அத்தகைய பதவி விலகுகையானது, அப்பதவிவிலகுகை எத்தேதியன்று அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) அமைச்சர், எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை, அதற்காக குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட

உறுப்பினரொருவர், சபையின் உறுப்பினரொருவராக மீளநியமிக் கப்படுவதற்கு அல்லது வேறேதேனும் தன்மையில் சபையில் சேவை யாற்றுவதற்குத் தகவுடையவராதலாகாது.

(3) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரின் இறப்பு, பதவி விலகுகை அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் பதவி வறிதாகும் பட்சத்தில், அமைச்சர், 4 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கமைய அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோ ராளை நியமித்தல் வேண்டும்.

(4) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணமாக அல்லது அவர் மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர், 4 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய உறுப்பினர் சமுகமளிக்காத போது அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கு வேறு எவரேனுமாளை நியமித்தல் வேண்டும்.

(5) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், தவிசாளரிட மிருந்து அத்தகைய சமுகமளிக்காமைக்கான முன்னனுமதியைப் பெறாமல் சபையின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுமிடத்து, அத்தகைய உறுப்பினர் மூன்றாவது கூட்டத்தின் முடிவில் தனது பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அமைச்சர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப் பட்ட முறையில் வேறோராளை நியமித்தலும் வேண்டும்.

உறுப்பினரொருவராக இருப்பதற்கான தகைமையீனம்

7. எவரேனும் ஆள் -

(அ) அத்தகைய ஆள் இலங்கைப் பிரசையொருவராக இல்லா திருப்பின் அல்லது இல்லாதொழிந்தால்;

(ஆ) அத்தகைய ஆள் பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபையொன்றின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார

சபையின் உறுப்பினராகவிருப்பின் அல்லது உறுப்பின ரொருவராகவந்தால்;

(இ) அத்தகைய ஆள் சபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதனை பாதிக்கக்கூடிய ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண் டிருப்பின்;

(ஈ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ், சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்;

(உ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித்துக் கொண்டிருப்பின் அல்லது அனுபவித்திருப்பின்,

அவர் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்வதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்

**8.** (1) சபையின் கூட்டமொன்றிற்கு தவிசாளர் சமுகமளித் திருப்பின், அவர் அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டமொன்றிற்கு தவிசாளர் சமுகமளிக்காத போது, சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பாகவும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பாகவும் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(3) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பி னர்களாதல் வேண்டும்.

(4) வாக்குகள் சமமாகவிருக்கின்றவிடத்து, தவிசாளர் அவரது வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களிடையேயான வெற்றிடம் சபையின் செயல்களையும் நடவடிக்கைகளையும் செல்லுபடியற்றதாக்குதலாகாது

**9**. சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையேயான ஏதேனும் வெற்றிடம் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர்களின் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

விசேட மற்றும் பொதுப் பணிப்புக்கள் அமைச்சரினால் வழங்கப்படுதல் வேண்டும்

**10**. அமைச்சர், காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின்கீழ் சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பில் அதற்கு அத்தகைய விசேட அல்லது பொதுப் பணிப்புக்களை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பணிப்புகளுக்கு பயன் கொடுப்பது சபையின் கடமையாதலும் வேண்டும்.

## பாகம் III

### சபையின் தத்துவங்களும் பணிகளும்

சபையின் தத்துவங்களும் பணிகளும்

**11**. நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களுக்கும் இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுப்பதில் சபையானது பின்வருவனவற்றிற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) 22 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட இழைய ஒருங்கிணைப்பாளர் ஒருவரினூடாக நன்கொடையாளர்களின் இறப்பின் மேல், அவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட விழிவெண்படல இழையங்களை திரட்டுதலும், செய்முறைப்படுத்துதலும் விநியோகித்தலும்;

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின் கீழ் கண் அறுவை சிகிச்சைக்குத் தேவைப்படும் விழிவெண்படல இழையங்கள் மற்றும் வேறு

இழையங்களைப் பேணிக்காத்தலும் களஞ்சியப்படுத்தலும்;

(இ) ஏதேனும் கண் அறுவை சிகிச்சையை, சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் நிறைவேற்றுவதற்கு ஒழுங்கேற்பாடு செய்தல்;

(ஈ) 1987 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டத்தினதும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய வருங்கால நன்கொடையாளர்களின் இறப்பின் மேல் விழிவெண்படல இழையங்களை நன்கொடையளிப்பதற்காக அவர்களின் எழுத்திலான சம்மதத்தைப் பெறுதல்;

(உ) கண் அறுவை சிகிச்சைக்குத் தேவைப்படும் விழிவெண்படல இழையங்கள் அல்லது வேறு இழையங்களின் தரம் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக பயன்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படவேண்டிய வாறான நியமங்களை ஈடுசெய்யாதவிடத்து அத்தகைய இழையங்களை மீளப்பெறுதல் அல்லது தரம் குறைத்தல்;

(ஊ) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளருடனான கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், கண் அறுவை சிகிச்சைக்குத் தேவைப்படும் எவையேனும் விழிவெண்படல அல்லது வேறு இழையங்களின் நன்கொடையாளர்களுக்கான இடாப்பொன்றையும் தரவுத்தளமொன்றையும் பேணுதல்;

(எ) கண் அறுவை சிகிச்சைக்குத் தேவைப்படும் விழிவெண்படல இழையங்களையும் வேறு இழையங்களையும் மாற்றிப் பொருத்துதல் மற்றும் செய்முறைப்படுத்தல் தொடர்பான ஆகுசெலவுகளை மேவுவதன் பொருட்டு இலங்கை நாட்டினத்தவர்களாகவிராதவர்களிடமிருந்து அறிவிடப்படவேண்டிய கட்டணங்கள் தொடர்பில் அமைச்சருக்கு மதியுரையளித்தல்;

(ஏ) நட்புறவுச் செயலொன்றாக ஏதேனும் வெளிநாட்டுக்கு செய்முறைப்படுத்தல் அறவீடுகள் இன்றி கண் அறுவை சிகிச்சைக்குத் தேவைப்படும் விழிவெண்படல இழையங்கள் மற்றும் வேறு இழையங்களை பகிருமாறு அமைச்சரினால் கோரப்படும் போது அவ்வாறு பகிர்தல்;

(ஐ) கண் வங்கித் தொழில் தொடர்பான நிபுணத்துவத்தை அல்லது தொழில்நுட்பத்தை வேறு நாடுகளுடன் பகிர்தல்;

(ஒ) ஏற்புடையற்பாலதான நியமங்களின் அடிப்படையில் விழிவெண்படல இழையங்களைத் திரட்டுதல் மற்றும் மாற்றிப் பொருத்துதல் தொடர்பான ஒழுக்கவியற் கோவையொன்றை வகுத்தமைத்தல்;

(ஓ) அலுவலர்கள்' மற்றும் ஊழியர்களை நியமித்தலும் தொழிலுக்கமர்த்துதலும் பதவியிலிருந்து நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும் அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் அத்துடன் ஊதியத்துக்கு ஏற்புடையற்பாலதான கொள்கைக்கு இணங்க சுகாதார அமைச்சின் கலந்தாலோசனையுடன் சபையினால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்தின் நியதிகளின் படி அவர்களுக்கு அத்தகைய ஊதியத்தைச் செலுத்துதலும்;

(ஔ) இலங்கை தேசிய கண் வங்கிக்கான அடையாளச் சின்னமொன்றை வடிவமைத்தல், பேணுதல் மற்றும் அதனைப் பயன்படுத்துதல்;

(க) அவசியமாகின்றவிடத்து, இலங்கை தேசிய கண் வங்கியின் கடிதத்தலைப்புகளில் அல்லது வேறு எவையேனும் ஆவணங்களில் இலங்கை தேசிய கண் வங்கிக்கு உதவுகின்ற அல்லது தராதர அங்கீகாரமளிக்கின்ற ஏதேனும் நிறுவனத்தின் சின்னங்கள், சைகைகள், குறிகள் அல்லது எழுத்துக்களைப் பயன்படுத்துதல்;

(ங) கண் வங்கித்தொழில் தொடர்பில் தர உறுதிப்பாடு மற்றும் முறைமை அபிவிருத்தி பற்றி ஆட்களுக்கு பயிற்றுவிப்பதற்கென தர உறுதிப்பாடு மற்றும் முறைமை அபிவிருத்தி

யில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களாகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுக்களாகவும் இருக்கவேண்டிய வெளிநாட்டு நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை அமைச்சரின் ஒருப்பாட்டுடன் செய்துகொள்ளல்;

(ச) இலங்கை தேசிய கண் வங்கியின் உத்தியோகத்தர்களை இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே பயிற்றுவித்தல் மற்றும் கண் வங்கித்தொழில் மற்றும் மாற்றிப் பொருத்துதல் என்பவைபற்றி வேறு நாடுகளின் கண் வங்கி உத்தியோத்தர்களைப் பயிற்றுவித்தல் அத்துடன் அத்தகைய பயிற்சிக்காக வெளிநாட்டினத்தவர்களிடமிருந்து விதிக்கப்படற்பாலதான கட்டணங்களைத் தீர்மானித்தல்;

(ஞ) கண் அறுவை சிகிச்சை மற்றும் விழிவெண்படலங்கள் மற்றும் வேறு இழையங்களை நன்கொடையளித்தலும் அத்தகைய நன்கொடைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை முறைகளும் பற்றி விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் அல்லது வேறு ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்குபடுத்துதல்;

(ட) நம்பிக்கைப்பொறுப்புக்குச் சொந்தமான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருத்தலும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், ஈடுவைத்தலும் அடைமானம் வைத்தலும் அல்லது விற்பனை செய்தலும் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தலும் மற்றும் அதற்குச் சொந்தமான ஏதேனும் காணியின் மீது கட்டிடங்களை நிர்மாணித்தலும்;

(ண) இலங்கையினுள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள மூலங்களிலிருந்து தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு அளிக்கப்பட்ட அசையும் மற்றும் அசையா மானியக்கொடைகள், கொடைகள், நன்கொடைகள் மற்றும் மரணசாசனக் கொடைகளை ஏற்றுகொள்ளுதலும் பெறுதலும் அத்துடன் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்துதலும்:

ஆயின், சபையானது நம்பிக்கைப்பொறுப்புக்குச் செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(து) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அரச வங்கியில் அல்லது வங்கிகளில் நடப்பு, சேமிப்பு அல்லது வேறு வைப்புக் கணக்குகளை திறத்தலும் பேணுதலும் அத்தகைய கணக்குகளை மூடிவிடுதலும்;

(ந) சபையின் பணிகளின் முறையான நிறைவேற்றுகையை வசதிப்படுத்துவதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறு செயல்களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

ஆதனத்தை வைத்திருப்பதற்கான நம்பிக்கைப் பொறுப்பின் தத்துவம்

**12.** நம்பிக்கைப் பொறுப்பானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையுதிர்ப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் உரித்தாகவருகின்ற அசையும் அல்லது அசையா ஆதனத்தை எடுக்கவும் வைத்திருக்கவும் சட்டத்தில் இயன்றதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நம்பிக்கைப்பொறுப்பினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் ஊதியம்

**13.** நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் சபையின் உறுப்பினர்களுக்கு ஊதியமளிக்கப்படலாம்.

நம்பிக்கைப் பொறுப்பின் இலச்சினை

**14.** (1) நம்பிக்கைப்பொறுப்பின் இலச்சினை, சபையானது காலத்துக்குக் காலம் முடிபு செய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) நம்பிக்கைப்பொறுப்பின் இலச்சினை, தவிசாளரின் முன்னிலையில் தவிர அல்லது அவர் இல்லாதிருப்பின் அதற்கெனத் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரினதும் சபையின் வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையில் தவிர ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. அத்தகைய உறுப்பினர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கையொப்பமானது, எவரேனுமாள் சாட்சியாக கையொப்பமிடுவதிலிருந்து தனிவேறாதல் வேண்டும்.

(3) சபையானது, சபையின் இலச்சினை எந்த சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சாதனம் அல்லது ஆவணம் ஒவ்வொன்றும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

தத்துவங்களை கையளித்தல் முதலியன

**15.** (1) சபையானது எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு கையளிக்கலாம். அத்தகைய உறுப்பினர் சபையினால் வழங்கப்படக்கூடிய ஏதேனும் விசேட அல்லது பொதுப் பணிப்புக்கமைய அத்தகைய தத்துவத்தினை, கடமையை அல்லது பணியை பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், சபையானது அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணியை பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

## பாகம் IV
## தேசிய கண் வங்கி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைத் தாபித்தல்

**16.** (1) (இதனகத்துப்பின்னர், “நிதியம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய கண் வங்கி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் எனவழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தின் முகாமை, நிருவாகம், கட்டுப்பாடு மற்றும் தொழிற்பாடு சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(3) நிதியத்திற்கு பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்-

(அ) இலங்கை தேசிய கண் வங்கியின் ஆரம்ப அளிப்பு மற்றும் வருடாந்த அளிப்புக்கள் உட்பட நம்பிக்கைப்பொறுப்பின் பயன்பாட்டிற்காக காலத்துக்குக்காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திரட்டப்பட்ட ஏதேனும் நிதி அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் அல்லது தேறிப் பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட பணங்கள்;

(இ) 30 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிதியத்திற்கு கைமாற்றப்பட்ட பணத்தொகை; அத்துடன்

(ஈ) நம்பிக்கைப்பொறுப்புக்கு வருமதியாகவுள்ள முதலீடுகளிலிருந்தான ஏதேனும் வருமானம் அல்லது வேறு பெறுகைகள்.

(4) நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) நம்பிக்கைப்பொறுப்பின் பணியாற்றுகைக்கும் பேணுகைக்கும் அவசியமாகவுள்ளவையான எல்லா செலவுகளும்;

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமாகவுள்ளனவென சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறு எல்லாக் கொடுப்பனவுகளும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**17.** (1) நம்பிக்கைப்பொறுப்பின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) நம்பிக்கைப்பொறுப்பின் வருமானத்தின் மற்றும் செலவினத்தின் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களின் கணக்குகள் பற்றிய புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் சபையானது செய்வித்தல் வேண்டும்.

(3) சபையானது ஒவ்வோராண்டும் திசெம்பர் முப்பத்தோராம் நாளன்றுள்ளவாறு அதன் கணக்குகள் பற்றிய புத்தகங்கள் சமப்படுத்தப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் அடுத்துவரும் மாச்சு மாதம் முப்பத்தோராம் நாளுக்கு முன்னர், முதலாவது குறிப்பிடப்பட்ட தேதிவரை ஆக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய சுருக்கத்தைக் கொண்ட வருமானம் மற்றும் செலவினக் கணக்கையும் ஐந்தொகையையும் தயாரிக்கச் செய்வித்தலும் வேண்டும்.

(4) வருமானம் மற்றும் செலவினக் கணக்கும் ஐந்தொகையும் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட சபையின் உறுப்பினர்களினால் அவ்வாறு கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(5) நம்பிக்கைப்பொறுப்பின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி வருடாந்தம் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

வருடாந்த அறிக்கை

**18.** (1) நம்பிக்கைப்பொறுப்பானது, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவிலிருந்து ஆறுமாதங்களினுள் அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய நிரலொன்றுடன் சேர்த்து நம்பிக்கைப் பொறுப்பினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையுடன் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து அவ்வாண்டுக்கான நம்பிக்கைப்பொறுப்பின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளும் இணைக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சர் அவ்வருடாந்த அறிக்கையைப் பெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணத்துடன் சேர்த்து பாராளுமன்றத்தில் அதனால் கவனத்திற்கொள்ளப்படுவதற்காக அத்தகைய அறிக்கையை பட்டியலில் இடுதல் வேண்டும்.

## பகுதி V

### நம்பிக்கைப்பொறுப்பின் பணியாட்டொகுதியினர்

பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரதான நிறைவேற்று அலுவலராக விருத்தல் வேண்டும்

**19.** (1) அமைச்சர், சபையுடனான கலந்தாலோசனையுடன் நம்பிக்கைப்பொறுப்பின் பணியாட்டொகுதிக்கு பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராக இருப்பதற்கான ஆளொருவரை நியமித்தல் வேண்டும். பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளரானவர் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறான தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளரானவர், சபையின் பொதுப்பணிப்புகளுக்கமைய, நம்பிக்கைப்பொறுப்பின் அலுவல்களின் நிருவாகத்திற்கும், சபையினால் அவருக்கு குறித்தளிக்கப்படக் கூடியவாறான தத்துவங்கள் மற்றும் கடமைகளின் பிரயோகத்திற்கும் புரிகைக்கும் அத்துடன் நம்பிக்கைப்பொறுப்பின் ஊழியர்களின் நிருவாகத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பாக்கப்படுதல் வேண்டும். பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர், சபையின் எல்லா முடிபுகளையும் நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன் சபையின் செயலாளராக பணியாற்றுதலும் வேண்டும்.

(3) பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர், சபையின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை நம்பிக்கைப்பொறுப்பின் எவரேனும் ஊழியருக்கு கையளிப்பது அவசியமென அவர் கருதும் போதெல்லாம் அவ்வாறு கையளிக்கலாமென்பதுடன் அத்தகைய ஊழியர், பிரதான

நிறைவேற்றுப் பணிப்பாளரின் பொது அல்லது விசேட பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும். பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர், அத்தகைய கையளிப்பு எவ்வாறிருப்பினும், இவ்வுட்பிரிவின்கீழ் அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் மற்றும் புரியலாம்.

(4) அமைச்சர், பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளரை பதவியிலிருந்து அகற்றுவதற்கான காரணங்களைக் குறித்தளித்ததன் பின்னர், அவ்வாறு அகற்றலாம் என்பதுடன் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரது இடத்தில் செயலாற்ற வேறோர் ஆளையும் நியமிக்கலாம்.

(5) பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர், அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அவர் (4) ஆம் உட்பிரிவின்கீழ் அகற்றப்பட்டாலொழிய, மேலுமொரு பதவிக்காலத்திற்கு மேற்படாத பதவிக்காலத்திற்கு தொடர்ச்சியாகவோ அல்லது வேறு வகையாகவோ மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதலும் வேண்டும்.

(6) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இலங்கை தேசிய கண் வங்கியின் மருத்துவப் பணிப்பாளராக பதவி வகிப்பவர், (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் முதலாவது பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் நியமிக்கப்படும்வரையில் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராக பணியாற்றுதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பின் மருத்துவப் பணிப்பாளர்

**20.** அமைச்சர், சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளருடனான கலந்தாலோசனையுடன், விழிவெண்படல உயர் புலமைப்பரிசிலை நிறைவு செய்துள்ள அல்லது வெளிப்புற கண்நோய்களில், விழிவெண்படல

அறுவை சிகிச்சையில், ஆராய்ச்சியில் நிபுணத்துவத்தைக் காட்டியுள்ள அல்லது விழிவெண்படல அல்லது வெளிப்புற கண்நோய்களில் கற்பித்தல் அனுபவத்தைக் கொண்ட அல்லது விழிவெண்படல மாற்றிப்பொருத்துகையில் அனுபவம்கொண்ட கண் மருத்துவர் ஒருவராகவுள்ள ஆளொருவரை நம்பிக்கைப் பொறுப்பின் மருத்துவப் பணிப்பாளராக நியமித்தல் வேண்டும்.

*அலுவலர் களையும் சேவையாளர் களையும் நியமித்தல்*

**21.** (1) சபையின் கோரிக்கையின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நம்பிக்கைப் பொறுப்பின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் என்பதுடன் அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாகவும் நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நம்பிக்கைப் பொறுப்பின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நம்பிக்கைப் பொறுப்பின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*இழைய ஒருங்கிணைப் பாளர்களை நியமித்தல்*

**22.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான இழைய ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவர்களின் தகைமைகள், தத்துவங்கள் மற்றும் பணிகள் சபையினால் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**23.** நம்பிக்கைப்பொறுப்பின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப் படுதல் வேண்டும்.

*நம்பிக்கைப் பொறுப்பின் அலுவலர் களும் சேவையாளர் களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின்கீழ் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல் வேண்டும்*

**24.** (1) நம்பிக்கைப்பொறுப்பினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நம்பிக்கைப்பொறுப்பினால் உறப்பட்ட ஏதேனும் செலவு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நம்பிக்கைப்பொறுப்பிற்கு செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக் கைக்கான பாதுகாப்பு*

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது சபையின் எவரேனும் உறுப்பினரினால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் எவரேனும் அலுவலரினால், சேவையாளரினால் அல்லது முகவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத் தில் அவருக்கு எதிராக கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவு அவரால் அறவிடப்பட்டாலொழிய நிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தினுள் நம்பிக்கைப் பொறுப்பானது அட்டவணைப் படுத்தப் பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்

**25.** நம்பிக்கைப்பொறுப்பானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

பகுதி VI

**தவறுகளும் தண்டங்களும்**

இச்சட்டத்தை மீறி விழிவெண் படல இழையங்கள் முதலியவற்றின் ஏதேனும் விற்பனை, கையாளுகை அல்லது கையுதிர்ப்பு தவறொன் றாதல் வேண்டும்

**26.** (1) ஆளெவரும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி கண் அறுவை சிகிச்சைக்காக தேவைப்படும் ஏதேனும் விழிவெண்படல இழையத்தை அல்லது வேறு ஏதேனும் இழையத்தை பெறுமதி வாய்ந்த பிரதிபயனொன்றுக்காக வாங்குதலோ, விற்பனை செய்தலோ அல்லது ஏதேனும் முறையில் கையுதிர்த்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பகுதி VII

**நானாவிதமானவை**

ஒழுங்கு விதிகள்

**27.** (1) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்களுக்காக இச்சட்டத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்

படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அவ் வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர் சபையுடனான கலந்தா லோசனையுடன் பின்வருவன எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) கண் அறுவை சிகிச்சைக்கு தேவைப்படும் விழிவெண் படல இழையங்கள் மற்றும் வேறு இழையங்களைச் சேகரிப்பதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை;

(ஆ) கண் அறுவை சிகிச்சைக்காக திரட்டுவதற்குப் பொருத்த மான, அந்நோக்கத்திற்கு தேவைப்படும் விழிவெண்படல இழையங்கள் மற்றும் வேறு இழையங்களின் தரம்;

(இ) விழிவெண்படல இழையங்களை திரட்டுதல் மற்றும் மாற்றிப்பொருத்துவதில் கடைபிடிக்கப்படவேண்டிய மருத்துவ மற்றும் தர நியமங்களுக்கான நடவடிக்கை முறை;

(ஈ) கண் அறுவை சிகிச்சைக்கு தேவைப்படும் விழிவெண் படலங்கள் மற்றும் வேறு இழையங்களை மாற்றிப் பொருத்துவதற்கும் செய்முறைப்படுத்துவதற்குமான ஆகுசெலவை மேவுவதற்கு இலங்கை நாட்டினத்தவர் களாகவிராதவர்களிடமிருந்து விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள்;

(உ) கண் அறுவை சிகிச்சைக்கு தேவைப்படும் விழிவெண் படலங்கள் மற்றும் வேறு இழையங்களை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை; அத்துடன்

(ஊ) விழிவெண்படலங்களுக்கான மற்றும் வேறு இழையங் களுக்கான கோரிக்கைகளின் இலத்திரனியல் சமர்ப்பிப் புத் தொடர்பான கருமங்கள்.

(3) இப்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டின்மேல் அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழுங்குவிதியொன்று எத்தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்

**28.** (1) சபையானது, எக்கருமங்களுக்காக இச்சட்டத்தினால் விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அவ்வெல்லாக்கருமங்கள் தொடர்பிலும் அல்லது ஏதேனும் கருமம் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, குறிப்பாக பின்வரும் கருமங்களுக்காக விதிகளை ஆக்கலாம்:-

(அ) இழைய ஒருங்கிணைப்பாளர்களின் தகைமைகள், தத்துவங்கள் மற்றும் பணிகளை தீர்மானிப்பதற்கும்;

(ஆ) கண் அறுவை சிகிச்சைக்கு தேவைப்படும் விழிவெண்படல இழையங்கள் மற்றும் வேறு இழையங்களை இலங்கையர்களுக்கு விநியோகித்தல் தொடர்பான நடவடிக்கைமுறைகளைத் தீர்மானிப்பதற்கும்;

(இ) இழைய ஒருங்கிணைப்பாளர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிக்கான நடவடிக்கைமுறையைத் தீர்மானிப்பதற்கும்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழ் வைக்கப்படவேண்டியதும் பேணப்பட வேண்டியதுமான இடாப்புக்களைப் பேணவும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் மேல் வலுவுக்கு வருதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியொன்றினுள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அவசியமேற்படும்போது திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

1987 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டத்தின் ஏற்புடைமை

**29**. ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஏழாம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டத்தின் 3,4,5,6,9,10,11,12,13,14,15,16,17 மற்றும் 18 ஆகிய பிரிவுகள் இச்சட்டத்தின்கீழ் பயன்படுத்தப்படும் இழையங்கள் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பேணல்களும் நிலை பெயர்கால ஏற்பாடுகளும்

**30**. (1) 1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தில் உள்ள இலங்கை தேசிய கண் வங்கிக்கு வரவுக்கிருக்கும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திற்கு கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முன்னரான நாளன்று பதவிவகிக்கும் இலங்கை தேசிய கண் வங்கியின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அல்லது

*சேவையாளர்களினதும் சபையினதும் சம்மதத்துடன் நம்பிக்கைப் பொறுப்பின் அலுவலர்களாக அல்லது சேவையாளர்களாகக் கருதப் படுதல் வேண்டும்.*

*(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் தமது சம்மதத்தை வெளிப்படுத்தி யுள்ள எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் ஏற்புடையற் பாலதான கொள்கைக்கு இணங்க சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்தின் நியதிகளுக்கமையவும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர் அவர்களுக்கு ஏற்புடையதாகவிருந்த தொழில் நியதிகளிலும் பார்க்க அனுகூலம் குறைந்தனவாகவிராத நியதிகளின் மீதும் தொழிலுக்கமர்த்தப் படுதல் வேண்டும்.*

*(4) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஆனால் விழிவெண்படலத்துக்கான மற்றும் வேறு இழையங்களுக் கான கோரிக்கைகளின் இலத்திரனியல் சமர்ப்பிப்பு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி நடைமுறைக்கு வரும் தேதிக்குமுன்னர் செய்யப்படும் விழிவெண்படலத்துக்கான மற்றும் வேறு இழையங்களுக்கான ஏதேனும் கோரிக்கை, இச்சட்டத் தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின்கீழ் செல்லுபடியான முறை யில் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க விளித்துரைக்கவும்படலாம்.*

*பொருள் கோடல்*

**31.** *இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலொழிய–*

*"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 43 ஆம் அல்லது 44 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி சுகாதாரம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப் படுகின்றதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;*

"இழையம்" என்பது, 1987 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்;

"இழைய ஒருங்கிணைப்பாளர்" என்பது, இலங்கை மருத்துவப் பேரவை அல்லது இலங்கை தாதியர் பேரவையின்கீழ் பதிவுசெய்யப்பட்டவரும் கண்வங்கியில் மீட்டுக் கொணர்தல், உள வளத்துணை மற்றும் இழைய ஒழுங்கிணைப்பைப் புரிபவருமான எவரேனும் தாதித்தொழில் அலுவலர் எனப் பொருள்படும்.

**32.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*